திரை மொழி
RNI No: TNTAM/2023/88599
THIRAI MOZHI TAMIL MONTHLY
தமிழ் மாத இதழ்

| திரை: 02 | மொழி : 09 | ஏப்ரல் - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 02 | Issue : 09 | April - 2025 | Page: 8 | Price: Rs. 10 |

# கமலும் ஏ.ஐ.யும்



கமல் ஹாசன் அர்விந்த் ஸ்ரீனிவாசன்

நான் இந்தக் கட்டுரையின் பாதியில் அடுத்த வரிக்கு யோசித்துக் கொண்டிருந்த போது, தக் லைஃப் படத்தின் ஜிங்குசா பாடல் சரியாக 12.34 மணிக்கு ரிலீஸ் என Xல் பார்த்து கவனம் சிதறினேன். மணிரத்னத் தனமான கல்யாணப்பாடல். 30 வருடமாக அடங்காத இசைப்புயல், சுமாரு கொமாரு, விண்வெளிநாயகா, STR fans assemble here, போன்ற கமெண்டுகளை யூடிபில் பார்த்துக் கொண்டிருக்கும்போது, பாரதி அழைத்து கட்டுரை ரெடியாகி விட்டதா என்றார். இன்னும் ஒரு மணி நேரத்தில் தருகிறேன் என அவகாசம் வாங்கினேன்.

எப்போதுமே நான் அவகாசம் வாங்கியதும், Spam காலர்களும், தெரியாம டயல் பண்ணிட்டேன் என்பவர்களும் தவறாமல் அழைப்பார்கள். அவர்கள் மறந்தால், போஸ்ட்வுமன் மூக்குக் கண்ணாடியை துடைத்தபடி, யார் வீட்டு தபாலையோ என்னிடம் நீட்ட காலிங்பெல்லை அழுத்துவார். இந்த தடைகள் எதுவுமே இல்லையென்றால் காலுக்கு கீழே கொசு கடிக்கும். கொசுபேட் தேடி எழுந்தால் கரண்ட் போகும். கரண்ட் போனவுடன் கீரைக்காரம்மா, அக்காகிட்ட குடுத்துடுங்க என ஒரு கீரைக்கட்டை திணித்துவிட்டுச் செல்வார்.

இன்றும் வரிசை மாறாமல் அத்தனை தடைகளும் எனக்கு பெப்பே காட்டியபோது, சிங்கப்பூரிலிருந்து சேஷாத்திரி கண்ணன் அழைத்து, இன்னும் ஒரு நாள் தான் இருக்கு, ஞாயிறன்று நாடகத்துக்கு கிராண்ட் ரிகர்சல். டிஜிட்டல் போர்ட்டில் ஏற்றி பிண்ணனியில் ஓட விட AI Video வேண்டும், என்று நினைவூட்டினார். அடுத்து பாரதி மீண்டும் வாட்ஸ் அப்பில் வந்து சார் என்றார். தாமதத்துக்கு எந்த காரணம் சொன்னாலும் ஒப்புக் கொள்ள மாட்டார் என்பதால் நிஜத்தையும் சொல்லவில்லை.

ஏ.ஐ தொழில்நுட்பம் பயன்படுத்தி பத்து லட்சத்தில் ஒரு கன்னடப் படம் வரப்போகுதுன்னு பேப்பர்ல பார்த்தேன். நீங்கதான் டைரக்ஷனா என்று பெங்களூரு ஜெய்நகரில் வசிக்கும், லிங்க்ட் இன்னில் அறிமுகமான சத்யா அழைத்தார்.

> “இந்திய புத்திசாலித்தனத்தின் பிரதிபலிப்பு”
> அர்விந்த் ஸ்ரீனிவாசன்

உலகத்திலேயே நீங்கதான் முதன் முதலில் ஏ.ஐ படம் எடுப்பீர்கள் என்று என்னை உற்சாகப்படுத்திக் கொண்டிருப்பார். பதிலுக்கு நான் அவருக்கு உலகம் முழுவதும் வெளிவந்துள்ள பல ஏ.ஐ. படங்களை அனுப்பி வைப்பேன். இப்போது “உலகத்திலேயே முதன் முதலில்” என்று எனக்குப் பட்டம் தருவதை நிறுத்திவிட்டார். ஆனாலும் விடாமல் இந்தப்படங்கள் எதுவும் சரியில்லை. நீ எடுக்கப்போகும் ஏ.ஐ. படம்தான் நன்றாக இருக்கும் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார். இருநாட்களுக்கு முன், அவருக்கு **கருடா** என்ற ஏ.ஐ. குறும்படத்தை அனுப்பி வைத்தேன். பார்த்துவிட்டு அசந்து போய்விட்டார். உடனே போனில் அழைத்து வியந்தார். அவர் மட்டுமல்ல அந்தப் படத்தைப் பார்த்த அனைவருமே வியந்து போனார்கள்.




தில்லு முல்லு, வீராப்பு, ஆடாம ஜெயிச்சோமடா படங்களை இயக்கிய, பத்ரி உருவாக்கியுள்ள ஏ.ஐ குறும்படம் இது. யுடியூபில் வெளியாகியிருக்கிறது. படத்தைப் பார்த்துவிட்டு “அட்டகாசமாக இருக்கிறது” என்று அவருக்கு, ஃபேஸ்புக்கில் கமெண்ட் செய்தேன். நீங்கள்தான் இன்ஸ்பிரேஷன் என்று பதில் அளித்தார். அது அவருடைய பெருந்தன்மை. திரைமொழியில் நான் எழுதி வரும் இந்த ஏ.ஐ சினிமா கட்டுரைகளை எத்தனை பேர் வாசிக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இதுவரை 30 பேராவது என்னை நேரில் சந்தித்து, ஏ.ஐ. பற்றி தெரிந்து கொண்டோம் என்று சந்தோஷித்திருக்கிறார்கள். இன்று மாலை கூட ஆக்ஷன் கலந்த ஒரு பாடலுக்கு ஏ.ஐ காட்சி அமைப்பதற்காக என்னை சந்திக்க வருகிறார். அவர் திரைமொழி வாசகர்தான். அவர் இந்தப் பாடல் பற்றிய தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதால், நானும் விவரிக்காமல் இரகசியம் காக்கிறேன்.

> பக்கம் 5ல் தொடரும்




# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-6

V.V.பிரசாத்
(டீ சினிமா ரிசோர்ஸ் சென்டரின் ஆவணக்காப்பாளர்)

(டீ சினிமா ரிசோர்ஸ் சென்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைப்பொருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படியாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)

இந்த அத்தியாயத்தில் நாம் தமிழ் திரையுலகின் ஆரம்பக்கால வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த ஒரு ஜாம்பவான் பற்றி பேச போகிறோம். அவர் தான் சிவகங்கை A.நாராயணன். அவர் ஒரு நடிகராக, இயக்குனராக, எழுத்தாளராக, தயாரிப்பாளராக, ஸ்டுடியோ உரிமையாளராக மட்டுமல்லாமல் திரைப்பட காட்சியாளராகவும் இருந்து ஒரு மேம்பட்ட பன்முக திறமையாளராக திகழ்ந்தார்.



ஜனவரி மாதம் 1900ல் சிவகங்கையில் பிறந்த A. நாராயணன் சென்னையில் உள்ள பிரபலமான பிரெசிடென்சி கல்லூரியில் தனது பட்டபடிப்பை முடித்தார். அதன் பிறகு மும்பையில் (அப்பொழுது பம்பாய்) காப்பீட்டு முகவராக இருந்தார். அங்கிருந்து வெளியே வந்த பின்னர் அவருடைய திரை வாழ்க்கை துவங்கியது. ஹாலிவுட் படங்களின் காட்சியமைப்பாளர்கள் K.D. பிரதர்ஸில் பணிப்புரிந்தார். 1922ல் முதலில் கொல்கத்தாவின் குயின்ஸ் சினிமாவிலும், பிறகு சென்னைக்கு வந்து சினிமா பாப்புலரிலும் (பிரபலமாக அறியப்படும் ஸ்டார் டாக்கீஸ்) மேலாளராக இருந்தார். பல திரையரங்குகளில் வேலை செய்த பின்னர் எக்சிபிடர் பிலிம் சர்வீசஸ் என்ற தன்னுடைய சொந்த நிறுவனத்தை சென்னையில் துவக்கினார். இதன் மூலமாக இந்திய மற்றும் வெளிநாட்டு படங்களை விநியோகம் செய்வதுடன் மாநிலத்தில் உள்ள பல நகரங்களில் திரையரங்குகளையும் குத்தகைக்கு விட்டார். இக்காரணங்களால் தென் இந்தியாவின் திரையுலக வியாபார தந்தை என அறியப்பட்டார் நாராயணன்.

திரைப்பட விநியோகத்தில் கொடிக்கட்டி பறந்த இக்காலக் கட்டத்தில் 1927 ம் ஆண்டு ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன், மதிராஸ் என தன்னுடைய சொந்த ஸ்டுடியோவை துவக்கினார். 1927ல் இருந்து 1930 வரை 20க்கும் மேற்பட்ட படங்களை தயாரித்தது ஒரு சிலவற்றை அவரே இயக்கியும் இருந்தார். தன்னுடைய எல்லா படங்களையும் அவருடைய எக்சிபிடர் பிலிம் சர்வீசஸ் நிறுவனமே விநியோகம் செய்தது. அதற்கு கிளைகள் டெல்லி மற்றும் பம்பாயிலுருந்து ரங்கூன் மற்றும் சிங்கப்பூர் வரை இருந்ததால் பல இடங்களில் படத்தை வெளியிட முடிந்தது. அவர் படங்களை இந்தியாவின் வங்காள பகுதியில் விநியோகம் அரோரா பிலிம் கார்ப்பரேஷன் செய்தது.

நாராயணன் தயாரித்த சில ஊமை படங்கள். துரதிர்ஷ்டமாக இப்படங்களின் பிரதி எங்கும் இல்லை

1. தர்மபத்தினி (இயக்குனர், தயாரிப்பாளர்)
2. ஞானசௌந்தரி (இயக்குனர், தயாரிப்பாளர்)
3. கோவலன் (இயக்குனர், தயாரிப்பாளர்)
4. கருட கர்வபங்கம் (இயக்குனர், தயாரிப்பாளர்)
5. லங்கா தகனம் (தயாரிப்பாளர்)
6. பாண்டவ நிர்வாகன் (தயாரிப்பாளர்)
7. கஜேந்தர மோட்சம் (தயாரிப்பாளர்)
8. சாரங்கதாரா (தயாரிப்பாளர்)
9. காந்தாரி வதம் (தயாரிப்பாளர்)
10. பிரமீளா அர்ஜுனன் (தயாரிப்பாளர்)
11. போஜராஜன் (தயாரிப்பாளர்)
12. பாண்டவ அங்கயானவாசம்
13. ராஜஸ்தான் ரோஜா (தயாரிப்பாளர்)
14. நரநாராயணன் (தயாரிப்பாளர்)
15. விஸ்வாமித்ரா (தயாரிப்பாளர்)
16. பவழராணி (தயாரிப்பாளர்)
17. மாயா மதுசூதனன் (தயாரிப்பாளர்)
18. மீங்கிரேலியதாரகை/லைலா (தயாரிப்பாளர்)
19. பீஷ்மர் பிரதியங்கியை (தயாரிப்பாளர்)
20. மச்சாவதாரம் (தயாரிப்பாளர்)

1928ம் ஆண்டு ஊமை படம் அனார்கலி பிரதியை எடுத்துக்கொண்டு ஹாலிவுட் சென்று காட்சிகள் நடத்தினார். இதன் மூலம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முழுநீள திரைப்பட காட்சி ஹாலிவுட்டில் நடத்திய முதல் நபர் என்ற பெருமையை பெற்றார்.

இந்த பயணத்தில் பல முக்கியமான இடங்கள் சென்றார். குறிப்பாக பிரபல யூனிவர்சல் ஸ்டுடியோஸ். பல ஜாம்பவான்களை சந்தித்து பேசினார். சினிமா தயாரிப்பில் உள்ள பல தொழில்நுட்பங்களை கண்டறிந்தார். இவையாவும் பார்த்து ஊக்கபட்டு 1934ம் ஆண்டு தென் இந்தியாவின் முதல் பேசும் ஸ்டுடியோவை அமைத்தார். இதை தன் மகன் பெயரில் ஸ்ரீனிவாசா சினிடோன் அல்லது சவுண்ட் சிட்டி என பெயரிட்டார்.

1928ல் அவர் தயாரித்த மீங்கிரேலிய தாரகை அல்லது லைலா ஒரே நேரத்தில் சென்னையின் வெல்லிங்டன் சினிமாஸ், பாம்பாயின் சூப்பர் சினிமாஸ் மற்றும் ராங்கூனில் உள்ள சினிமா டே பாரிஸ் திரையிடப்பட்டு மிக பெரிய வெற்றி பெற்றது. இப்படம் பல பாக்ஸ் ஆபீஸ் ரெகார்ட்டுகளை முறியடித்தது. வெறும் 5000 முதல் 6000 வரை செலவு செய்து படங்கள் எடுத்து வந்த நேரத்தில் இந்த படம் 75000 செலவில் எடுக்கப்பட்டது. இதை அக்காலக்கட்டத்தில் சாத்தியமாக்க கூடிய ஒரே நபர் நாராயணன் அவர்கள் தான் என கூறினால் மிகை ஆகாது.

நாராயணன் தனது வாழ்க்கையில் எட்டிய பல மைல்கல்களில் முக்கியமானது அவர் கட்டிய தென் இந்தியாவின் முதல் பேசும் ஸ்டுடியோ ஸ்ரீனிவசா சினிடோன் / சவுண்ட் சிட்டி. சேத்துபட்டு பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இது கட்டபட்டது. ஒலிபதிவுக்காக கொல்கத்தா, பம்பாய், பூனா என சென்றுகொண்டிருந்த தென் இந்திய தயாரிப்பாளர்களுக்கு இந்த ஸ்டுடியோ வரபிரசாதமாக அமைந்தது. சவுண்ட் சிடியில் சூட்டிங் சூரிய வெளிச்சத்தில் நடைபெற்றது. உட்புற படபிடிப்புக்கு தார்பாலின் உரைகள் பயன்படுத்தினார்கள். இங்கு எடுக்க பட்ட முதல் படம் நாராயணன் வர்களே தயாரித்து இயக்கிய படமான ஸ்ரீநிவாச கல்யாணம் ஆகும். இப்படத்தில் திரையுலக வரலாற்றின் இரண்டு முக்கியமான நிகழ்வுகள் இடம் பெற்றன. ஒன்று சென்னையில் முழுவதுமாக எடுக்கப்பட்ட முதல் தமிழ் பேசும்படம் மற்றொன்று அவருடைய மனைவி மீனாக்ஷி நாராயணன் இந்தியாவின் முதல் பெண் ஒலிப்பதிவாளர் ஆனது. பின்னர் மேலும் நான்கு படங்களுக்கு ஒலிப்பதிவாளராக பணிபுரிந்தார். ஒலிப்பதிவு செய்த முதல் இந்திய பெண்மணி மட்டும் அல்லாமல் முதல் முறையாக 5 படங்களுக்கு ஒலிப்பதிவு செய்த பெண்ணும் ஆவார். பெருமைக்குரிய வியக்கமிகு இவ்விஷயங்கள் பெரும்பாலான வரலாற்று பதிவுகளில் இடம் பெறாமல் இருப்பது துரதிர்ஷ்ட வசமானது.

ஸ்ரீனிவாச கல்யாணம் திரைப்படத்தில் மற்றும் ஒரு சுவாரஸ்யமான விஷயம் நகைச்சுவை நடிகை அங்கமுத்து படப்பிடிப்புக்கு மாட்டு வண்டியில் வந்தது. படம் முடியும் வரை அவர் அதேப்போல் வந்தது வேடிக்கையான விஷயம்.

அதே வருடம் ஸ்ரீநிவாசா சினிடோன் தயாரித்த மற்றும் ஒரு படம் திரௌபதி வஸ்த்ரப்ரஹாரணம். இதே பெயருடன் இன்னொரு படம் அதே வருடம் 1934ல் வெளியானது. R. பத்மநாபன் இயக்கத்தில் ஏஞ்ஜெல் பிலிம்ஸ் தயாரித்தது. தயாரிப்பு குழுவில் மற்றும் ஒரு ஜாம்பவானான T.R. சுந்தரம் இருந்தார். இவரை பற்றி அடுத்த அத்தியாயத்தில் பேசுவோம். இரண்டு படங்களும் வியாபாரரீதியாக பெரும் வெற்றி பெற்றது.

**A.நாராயணன் மற்றும் R. பிரகாஷ் இயக்கிய திரௌபதி வஸ்த்ரப்ரஹாரணம்**




A நாராயணன் இயக்கிய வேறு சில படங்கள்:

- 1935: ஞானசவுந்தரி
- 1935: ராஜாம்பாள்
- 1936: தாரா சசாங்கம்
- 1936: மீரா பாய்
- 1936: மகாத்மா கபீர்தாஸ்
- 1936: விஸ்வாமித்ரா
- 1937: கிருஷ்ணா துலாபாரம்
- 1937: விக்ரம ஸ்திரீ ஸாஹஸம்
- 1937: விராட பர்வம்
- 1938: ஸ்ரீ ராமானுஜர்
- 1938: துளசி பிருந்தா
- 1938: விப்ரநாராயணா

1935ல் வெளியான ராஜாம்பாள் J.R. ரங்கராஜூ எழுதிய நாவலை தழுவி எடுக்கப்பட்டது. இதன் மூலம் புத்தகத்தின் அடிப்படையில் எடுக்க பட்ட முதல் படம் என்ற சிறப்பை

> பக்கம் 8ல் தொடரும்

# நிலா ஒன்று பாடல்கள் பல...

➤ கவிஞர் ந. வாசுகி



கவிஞர் கண்ணதாசனின் நிலவுப் பாடல்களில் மிகவும் புகழ் பெற்ற பாடல் "நிலவே என்னிடம் நெருங்காதே" என்ற "ராமு" படத்தில் இடம் பெற்ற பாடல்.

"பெரிய இடத்துப் பெண்" படத்தில் இடம் பெற்ற "அன்று வந்ததும் அதே நிலா, இன்று வந்ததும் அதே நிலா" என்ற கவிஞர் தீட்டிய பாடல் இளமைதுள்ளலோடு இளைஞர்களைக் கவர்ந்திருக்கும் வகையில் இருக்கும். "நாடோடி"யில் இடம்பெற்ற "அன்றொரு நாள் அதே நிலவில் அவர் இருந்தார் என்னருகில்" என்ற பாடல் இன்றைக்கும் கேட்பவர் மனதைக் கிரங்கடிக்கும்.



திரைப்பட பாடல்களில் நிலவை ஏராளமான பாடல்களில் பயன்படுத்திய வர் தஞ்சை இராமையாதாஸ் என்கிற பாடல் ஆசிரியர். "வாராயோ வெண்ணிலாவே" என்ற இவர் எழுதிய புகழ்பெற்ற பாடல் "மிஸ்ஸியம்மா" திரைப்படத்தில் இடம் பெற்றது.

ஒரு நிலவை இரண்டு இலக்கிய ஆளுமை மிக்க கவிஞர்கள் எப்படி தங்கள் உணர்வுகளை, வார்த்தை ஜாலங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்திப்போம்.

"பட்டினப் பிரவேசம்" படத்தில் கவிஞர் கண்ணதாசன் எழுதி எம் எஸ் விஸ்வநாதன் அவர்கள் இசையமைத்த இந்தப் பாடல் இன்றளவிற்கும் இளைஞர்களின் மனதை இதமாகத் தாலாட்டும் இனிய காதல் பாடல்.

பாடல் வரிகளுக்குள் செல்வோமா!

லா லலா லலா லலா
ல லால லால லா
வான் நிலா நிலா அல்ல உன் வாலிபம் நிலா
வான் நிலா நிலா அல்ல உன் வாலிபம் நிலா
தேன் நிலா எனும் நிலா என் தேவியின் நிலா
நீயிலாத நாளெலாம் நான் தேய்ந்த வெண்ணிலா
வான் நிலா நிலா அல்ல உன் வாலிபம் நிலா
மானிலாத ஊரிலே சாயல் கண்ணிலா
பூவிலாத மண்ணிலே ஜாடை பெண்ணிலா

தெய்வம் கல்லிலா
ஒரு தோகையின் சொல்லிலா
பொன்னிலா பொட்டிலா புன்னகை மொட்டிலா
அவள் காட்டும் அன்பிலா

இன்பம் கட்டிலா
அவள் தேகக் கட்டிலா
தீதிலா காதலா ஊடலா கூடலா
அவள் மீட்டும் பண்ணிலா

வாழ்க்கை வழியிலா
ஒரு மங்கையின் ஒளியிலா
ஊரிலா நாட்டிலா ஆனந்தம் வீட்டிலா
அவள் நெஞ்சின் ஏட்டிலா
சொந்தம் இருளிலா
ஒரு பூவையின் அருளிலா

சொந்தம் இருளிலா
ஒரு பூவையின் அருளிலா
எண்ணிலா ஆசைகள் என் நிலா
கொண்டதேன்
அதைச் சொல்வாய் வெண்ணிலா

இப்பாடலில் கவிஞர் ஒவ்வொரு வார்த்தையையும் " லா " என்று முடித்திருப்பார்.

எஸ்.பி.பாலசுப்ரமணியம் தன் இளமை தோய்ந்த வசீகரமான குரலில், வெகு அற்புதமாக உயிரை உருக்கும் அளவிற்கு, சந்தனத்தைக் குழைத்தது போன்று இனிய குரலில் பாடியிருப்பார்.

இப்பாடல், கேட்கும் போதெல்லாம் காதலில் மட்டுமல்ல, வாழ்வில் தோற்றவர்களுக்கும் மயிலிறகால் மருந்திடுவது போன்று ஓர் இதமான உணர்வை ஏற்படுத்தும்.

ஒரு கடற்கரையில் காதலனும், காதலியும் தங்கள் காதல் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது போல் இப்பாடலை காட்சிப்படுத்தி இருப்பார்கள். இப்பாடலில் கவிஞர் நிலவைப் பெண்ணோடு ஒப்பிட்டு காதலன் பாடுவது போன்று எழுதியிருப்பார்.

கவிஞரின் கையில் உள்ள பேனா பிரசவித்த இந்தப் பாடல் வரிகள், திரையுலகம் உள்ளவரை இசைப் பிரியர்களுக்கு நல்லதொரு விருந்தாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பாடலின் சிறப்பு அம்சம் என்னவென்றால், கதாநாயகி தன் உணர்வுகள் முழுவதையும் வார்த்தைகளில் வெளிப்படுத்தாமல் வயலின் இசை மூலமாக வெளிப்படுத்துவாள். எம் எஸ் விஸ்வநாதன் அவர்களின் இசையமைப்புத் திறனுக்கு இது ஒரு சான்றாகும்.

வயலின் வழியாகத்தான் இப்பாடலின் காட்சியில் நாயகி பேசுகிறாள், பாடுகிறாள், சிரிக்கிறாள், அழுகிறாள். அத்தனை உணர்வுகளையும் அழகாய் வெளிப்படுத்துவாள். இது பாடலுக்கு மேலும் அழகூட்டுகிறது. வயலின் என்பது ஒரு மனிதனின் அனைத்து உணர்வுகளையும் உள்வாங்கி வெளிப்படுத்தக்கூடிய ஓர் அற்புதமான இசைக்கருவி. வயலின் இசையை இப்பாடல் முழுவதும் எம்.எஸ்.வி அவர்கள் உபயோகித்திருப்பார்.

"வான் நிலா நிலா அல்ல உன் வாலிபம் நிலா
தேன் நிலா எனும் நிலா என் தேவியின் நிலா
நீ இல்லாத நாள் எல்லாம் நான் தேய்ந்த வெண்ணிலா"

இப்போது பாடலின் பொருளைக் காணலாம். தன் காதலியைப் பார்த்து தன் காதலை வெளிப்படுத்தும் நாயகன், பாடல் வரிகளைத் தொடங்கும் போது "வான் நிலா நிலா அல்ல" என்று தொடங்குகிறான்.

வானில் ஒளி வீசுகின்ற நிலா எனக்கு எந்த மகிழ்ச்சியையும், குளிர்ச்சியையும் தரவில்லை. உன் இளமை பொருந்திய அழகே எனக்கு நிலவாகக் காட்சி தருகிறது. தேன் போன்று தித்திக்கின்ற இளமையைச் சுமந்து கொண்டு என் அருகில் உள்ள என் தேவியே! நீயே என் உள்ளத்திற்கு உற்சாகம் வழங்குகின்ற வட்ட நிலவாக என்னை வலம் வருகிறாய். நீ என்னை விட்டு நீங்கினால் அல்லது என் அருகில் நீ இல்லையென்றால், அந்த நாட்களில் எல்லாம் நிலவு தேய்வது போல் நானும் தேய்ந்து வாடி விடுவேன் என்கிறான்.

"நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற அழகோ என்ற பாடல் வரிகளை இது நினைவுபடுத்துகிறது.

"மான் இல்லாத ஊரிலே சாயல் கண்ணிலா
பூ இல்லாத மண்ணிலே ஜாடை பெண்ணிலா"

தன் காதலியின் கண்களை மானின் விழிகளோடு ஒப்பிட்டுப் பேசுகிறான் மானின் கண்கள் மருகும் விழிகளாகக் காட்சி தரும். மான்கள் இல்லாத ஊரில், உன் கண்களில் மானின் சாயல் தெரிகிறது என்று வெட்கத்தால் அப்பெண்ணின் விழிகளும் மருள்கிறது என்று பொருள்படக் கவிஞர் கூறுகிறார்.

பூக்கள் இல்லாத மண்ணில் உன் ஜாடையில் பூக்களைப் பார்க்கிறேன். பூக்கள் எப்படி ஜாடை செய்யும்?



மொட்டாக இருக்கும் போது புன்னகைக்கிறது, தன் இதழ்கள் மலர்வதால் சிரிக்கிறது, தன் வாசத்தால் பிறரை கவர்ந்திழுக்கிறது, நேரம் செல்லச் செல்ல, மெல்ல வாடுகிறது. பின்பு செடியில் இருந்து உதிர்கிறது.

இப்பண்புகள் அனைத்தையும் ஒரு பெண்ணிடம் காணலாம். தன் காதலை ஒரு புன்னகை மூலமாகவும், கண்களில் ஏற்படும் மலர்ச்சியின் வாயிலாகவும், நளினமாக ஒரு பூவைப் போல் வெளிப்படுத்துவதால் பெண்ணின் ஜாடையை பூவோடு ஒப்பிடுகிறார் கவிஞர்.

"தெய்வம் கல்லிலா
ஒரு தோகையின் சொல்லிலா
பொன்னிலா, பொட்டிலா
புன்னகை மொட்டிலா
அவள் காட்டும் அன்பிலா"




தன் காதலியின் பேச்சிலும், பொன் போன்ற வதனத்தில் இட்ட பொட்டிலும், மாதுளை இதழ்கள் பிளந்தது போன்ற அவளின் வசீகரமான புன்னகையிலும், அவன் மீது அவள் காட்டுகின்ற அன்பிலும் தெய்வம் குடி கொண்டுள்ளது. அவளே என் தெய்வம். என் எதிரே தோன்றி கல்லில் உறைந்த தெய்வத்தை தன்னுள் காட்டுகிறாள் என்று இவ்வரிகள் நயம் பட உரைக்கின்றன.

" இன்பம் கட்டிலா, அவள் தேகக் கட்டிலா
தீதிலா காதலா, ஊடலா, கூடலா
அவள் மீட்டும் பண்ணிலா"

தீதிலா காதலா என்றால் ஆத்மார்த்தமாக நெஞ்சம் கலந்து அன்பு செலுத்துகின்ற, உடல் கவர்ச்சியோ இனக் கவர்ச்சியோ இன்றி இரு மனங்கள் லயித்து இணைந்த காதலாக இருப்பதால் தீதிலா காதல் என்று குறிப்பிடுகிறார் கவிஞர்.

நிலா உலா வரும்...



# இயக்குநர் சுந்தர் சி யின் –கேங்கர்ஸ்

*Avni Cinemax (P) Ltd* சார்பில் குஷ்பு சுந்தர் மற்றும் *Benz Media PVT LTD* சார்பில் A.C.S அருண்குமார் தயாரிப்பில், இயக்குநர் சுந்தர் சி மற்றும் வைகைப்புயல் வடிவேலு கூட்டணியில், நீண்ட இடைவேளைக்குப் பிறகு, காமெடி சரவெடியாக உருவாகியுள்ள திரைப்படம் “கேங்கர்ஸ்”.

வரும் ஏப்ரல் 24 ஆம் தேதி உலகமெங்கும் திரைக்கு வரவுள்ள நிலையில், இப்படத்தின் முன் வெளியீட்டு நிகழ்ச்சி, ஆயிரக்கணக்கான மாணவர்கள் முன்னிலையில், A.C.S மருத்துவக் கல்லூரி விழாவில், படக்குழுவினர் அனைவரும் கலந்துகொள்ள கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தயாரிப்பாளர் ஏ சி சண்முகம் அவர்கள் பேசியதாவது:-

அனைவருக்கும் வணக்கம். எம்ஜிஆர் பல்கலைகழகத்தில் கலைவிழா நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து, பிரசிடெண்ட் அருண்குமார் இந்த படக்குழுவை அழைத்துள்ளனர். மகிழ்விக்கும் மன்னர்கள் சுந்தர் சி மற்றும் வடிவேலு அவர்களை கெஸ்ட்டாக அழைத்துள்ளனர். பென்ஸ் மீடியாவிற்கு அடுத்தடுத்து, வெற்றிப்படங்களைத் தந்து வருகிறார் சுந்தர் சி. 12 வருடங்களாகக் கிடப்பிலிருந்த மதகஜராஜா படத்தை வெளியிட்டோம், அதையும் ஹிட்டாக்கி தந்தார். இவ்வளவு பெரிய ஆளுமைகள் இவ்விழாவிற்கு வந்ததற்கு நன்றி. வடிவேலு சார் பற்றிச் சொல்லத் தேவையில்லை, அவர் உலகப்புகழ் வாய்ந்தவர். பென்ஸ் மீடியா இவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்துள்ளது என்பதில் பெருமை. இந்தப்படம் கண்டிப்பாக அனைவரையும் மகிழ்விக்கும். இந்த கல்லூரியில் இந்த விழாவை நடத்துவது, மகிழ்ச்சி, அனைவருக்கும் நன்றி.

இசையமைப்பாளர் சத்யா பேசியதாவது:-

எனக்கு இந்த வாய்ப்பை தந்ததற்கு சுந்தர் சி சாருக்கு நன்றி. இசையில் எனக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் தந்துள்ளார். பாடல்களுக்கும் மிகப்பெரிய முக்கியத்துவம் தந்துள்ளார். சுந்தர் சி சார், வடிவேலு சார் கூட்டணியில் நானும் இருக்கிறேன் என்பது மகிழ்ச்சி அனைவருக்கும் நன்றி.

நடிகை வாணி போஜன் பேசியதாவது:-

இங்கு கல்லூரி மாணவர்கள் ஆடிய நடனம் மிக அற்புதமாக இருந்தது. சுந்தர் சி சாருக்கு பெரிய நன்றி சொல்ல வேண்டும். அவரும் வடிவேலு சாரும் இருக்கும் படத்தில் யார் கூப்பிட்டாலும் நடிப்பார்கள். இந்த படத்தில் நடிக்க வாய்ப்பு தந்ததற்கு நன்றி. சுந்தர் சி சார் மிக மிக எளிமையான இனிமையான மனிதர். அவருக்கு என் நன்றி. இப்படம் கண்டிப்பாக உங்களை மகிழ்விக்கும் அனைவருக்கும் நன்றி.

இயக்குநர் சுந்தர் சி பேசியதாவது:-

கல்லூரியில் உங்கள் எல்லோரையும் பார்க்க அத்தனை உற்சாகமாக உள்ளது. இனிமேல் நிறையக் கல்லூரி விழாவிற்கு வருகை தருவேன். நானும் வடிவேல் அண்ணனும் மீண்டும் இணைந்து, உங்களை மகிழ்விக்க, உழைத்துள்ளோம். என் மீது இப்படத்திற்காக நம்பிக்கை வைத்த, ஏ சி சண்முகம் அண்ணன், ஏசிஎஸ் அருண்குமார் ஆகியோருக்கு நன்றி. இந்தப்படம் ஆரம்பிக்க விதை போட்டது வடிவேல் அண்ணன் தான். தமிழில் மணிஹெய்ஸ்ட் மாதிரி ஒரு சின்ன ஊரில், ஆட்டோ ஓட்டுநர், டீச்சர் எல்லாம் வைத்து, பண்ணினால் எப்படி இருக்கும் என்பது தான் கதை. இந்தப்படத்திற்கு என்னடா தலைப்பு வைப்பது எனத் திணறியபோது, வடிவேல் அண்ணன் போற போக்கில் கேங்கர்ஸ் என்றார். அதையே தலைப்பாக வைத்து விட்டோம். கண்டிப்பாக இப்படம் உங்கள் எல்லோரையும் சந்தோசப்படுத்தும் நன்றி.

நடிகர் வடிவேலு பேசியதாவது:-

முதலில் சுந்தர் அண்ணன் சார்பிலும் என் சார்பிலும் ஏ சி சண்முகம் அய்யா அவர்களுக்கு நன்றி. 10 ஆயிரம் மாணவர்கள் முன்னிலையில் இப்பட விழா நடப்பது மகிழ்ச்சி. நானும் சுந்தர் சி அண்ணனும் 15 வருஷமா சேரவில்லை, நம்மூரில் பிரிச்சி வைக்க ஆளா இல்லை, இடையில் நாங்கள் பிரிந்திருந்தது பெரிதாகத் தெரியவில்லை. இந்தப்படம் எதோ நேற்று செய்த வின்னர் படம் மாதிரி, அத்தனை புதிதாக இருக்கிறது. சுந்தர் சி அண்ணனுக்கு சொல்லவா வேண்டும். ஒவ்வொரு காட்சியையும் ரசித்து ரசித்து உருவாக்கியிருக்கிறார். பேசி முடிச்சு 35 நாளில் இப்படத்தை முடித்து விட்டோம். உங்களுக்குத் தேவையான அத்தனை தீனியும் படத்தில் இருக்கிறது. இது தியேட்டரில் எல்லோரும் சேர்ந்து பார்த்து கொண்டாட வேண்டிய படம். சுந்தர் சி அண்ணன் அருமையாக எடுத்துள்ளார், என்னிடம் என்ன வாங்க வேண்டும் என, அவருக்கும் தெரியும் உங்கள் எல்லோருக்கும் கொண்டாட்டம் காத்திருக்கிறது. அனைவருக்கும் நன்றி.

கதை மற்றும் வசனகர்த்தா வெங்கட் ராகவன் பேசியதாவது:-

இந்த நிகழ்ச்சிக்கு, இவ்வளவு கூட்டத்தைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. இது நம்ம படம், கேங்கர்ஸ் ஆசிர்வதிக்கப்பட்ட படம், அரண்மனை வெற்றிக்குப் பிறகு என்ன பண்ணலாம் எனப் பேசும் போது, வடிவேலு அண்ணனுடன் பண்ணலாம் என பேசினோம். அடுத்த நாளே சுந்தர் சி சார், வடிவேலு அண்ணனைச் சந்தித்து ஐடியாவை பேசி ஓகே பண்ணினார். அடுத்த முன்றாவது வாரத்தில், படம் ஷூட்டிங் போய் விட்டோம். நாங்கள் நினைத்த அனைத்தும் கிடைத்தது. இந்தப்படத்திற்கு எல்லாமே தானாக அமைந்தது. நாங்கள் நினைத்த நடிகர்கள் கிடைத்தார்கள். தலைநகரம் படத்தில் வடிவேலு அண்ணனுடன் வேலை பார்த்துள்ளேன். இப்படத்தில் மீண்டும் வேலை பார்த்தேன், அவரிடம் அதே எனர்ஜி பல மடங்கு வளர்ந்துள்ளது, சுந்தர் சி அண்ணனுடன் வடிவேலு அண்ணன் கெமிஸ்ட்ரி அப்படி இருக்கும். அவர்களை ஃபேனாக பார்த்து ரசித்துள்ளேன். இந்தப்படத்தின் தயாரிப்பாளர் ஏசிஎஸ் சாருக்கு நன்றி. இந்தப்படம் மிக நன்றாக வந்துள்ளது, அனைவரும் தியேட்டருக்கு சென்று படம் பாருங்கள். அனைவருக்கும் நன்றி.

ஒளிப்பதிவாளர் எசக்கி கிருஷ்ணசாமி பேசியதாவது:-

படத்தில் வாய்ப்பு தந்த சுந்தர் சி அண்ணாவுக்கு நன்றி. அவருடன் எனக்கு இது 3 வது படம், என் கடைசி 7 படத்தில் அவர் ஏதாவது ஒரு வழியில் இருந்துள்ளார். அவருக்கு நன்றி. அவர் படம் எப்படி இருக்க வேண்டும், என்பதை முதலிலேயே சொல்லி விடுவார். முழு சுதந்திரம் தருவார். இப்படம் மிக அருமையாக வந்துள்ளது. கண்டிப்பாக அனைவருக்கும் பிடிக்கும்.

எடிட்டர் பிரவீன் ஆண்டனி பேசியதாவது:-

மக்களைச் சிரிக்க வைக்கும் அருமையான படங்களைத் தருபவர் எங்கள் சுந்தர் சி சார். கோடிக்கணக்கான மக்களைச் சிரிக்க வைக்கிறார். இப்படமும் அனைவரையும் சிரிக்க வைக்கும் நன்றி.

இப்படத்தில் சுந்தர் சி, வடிவேலு ஆகியோருடன் கேத்தரின் தெரேசா, வாணி போஜன், முனீஷ்காந்த், பக்ஸ், மைம் கோபி, ஹரீஷ் பேரடி, அருள் தாஸ், கருப்புசாமி, சந்தான பாரதி, ஷி மதுசூதன ராவ் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இயக்குநர் சுந்தர் சி இயக்கியுள்ள இப்படத்திற்கு, வசனங்களை வெங்கட் ராகவன் எழுதியுள்ளார். இசையமைப்பாளர் சி .சத்யா இசையமைத்துள்ளார். எசக்கி கிருஷ்ணசாமி ஒளிப்பதிவு செய்ய, எடிட்டிங் பணிகளை பிரவீன் ஆண்டனி செய்துள்ளார், கலைஇயக்கத்தினை பொன்ராஜ் கவனிக்க, சண்டைக்காட்சிகளை ஸ்டண்ட் மாஸ்டர் ராஜசேகர் ரி அமைத்துள்ளார்.

இப்படம் வரும் ஏப்ரல் 24 ஆம் தேதி உலகமெங்கும் திரைக்கு வரவுள்ளது.

# கமலும் ஏ.ஐ.யும்...

பக்கம் 1-ன் தொடர்ச்சி...

Perplexity AI கமல் இரசிகர்களிடம் அதிகப் பிரபலமடைந்திருக்கும் ஏ.ஐ. சான்பிரான்சிஸ்கோ நகரில் இதன் சிஇஓ அர்விந்த் ஸ்ரீனிவாசனை-கமல் சந்தித்த புகைப்படங்கள் வெளியான பின், சினிமா வட்டாரத்திலும் Perplexity AI என்ற பெயர் பிரலமாகிவிட்டது. Perplexity என்பதற்கு கூகுளிடம் அர்த்தம் கேட்டால் குழப்பம், கலக்கம் என கலவரமான அர்த்தம் சொல்கிறது. அதனால் Perplexity AI இதற்கு நேர்மாறானது. எல்.கே.ஜி. பாப்பா முதல் பிஹெச்டி அங்கிள் வரை, எந்த லெவல் கேள்வி கேட்டாலும் குழப்பமே இல்லாமல் தகுந்த விளக்கங்களை, ஆதாரங்களுடன் தருகிறது. எனவே அன்பர்கள் ஃபேஸ்புக் என்பதை முகநூல் என பெயர்த்தது போல பெயர் மாறாட்டத்தில் ஈடுபட வேண்டாம் என சான்பிரான்சிஸ்கோ பெர்பிளக்சிட்டி கமல் இரசிகர் பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

“சினிமாவில் இருந்து சிலிக்கான் வரை, கருவிகள் மாறலாம், ஆனால் புதிதாக கற்கும் தாகம் மாறாது. அரவிந்த் ஸ்ரீனிவாஸ் மற்றும் அவரது புத்திசாலித்தனமான குழுவை சந்தித்தது ஊக்கமளிக்கிறது”, என கமல், தனது சந்திப்பைப் பற்றி சமூக வலைதளத்தில் பகிர்ந்தார்:

69 வயதில் அவருடைய கற்றல் ஆர்வமும், புதிய தொழில்நுட்பங்களை சினிமாவில் பயன்படுத்த வேண்டும் என்றதாகமும் எனக்கு இன்ஸ்பிரேஷன். புதியதைத் தேடித் தேடி கற்கும் தீரா தாகம்தான் தனக்கும் ஏ.ஆர். இரகுமானுக்கும் உள்ள ஒற்றுமை என்று தக்லைஃப் பட அறிமுக விழாவில் கமல் பேசினார். ஆன்லைனில் புதிய தொழில்நுட்பம் எதைத் தேடிச் சென்றாலும், எனக்கு முன் அங்கே “followed by A.R.Rahman” என்பதை பார்க்க முடிகிறது என்று அவர் சொன்னது க்யூட்.




சென்னையில் இருந்து உலக அளவில் AI துறையில் முத்திரை பதித்த அரவிந்த், சென்னைப் பையன். அவரை “இந்திய புத்திசாலித்தனத்தின் பிரதிபலிப்பு” என்று கமல் பாராட்டினார். யாருக்கு எத்தனையாவது கல்யாணம் போன்ற பிதற்றல் திணிப்புகளுக்கு நடுவே கமல்அரவிந்த் சந்திப்பு சின்னச் செய்தியாகத்தான் வந்தது. ஆனாலும் அந்த சந்திப்பு பற்றிய அவதானிப்புகள் வெற்றிகரமாக இரண்டாவது வாரம் வந்துவிட்டன.

கமல் ஏ.ஐ. படிக்கப் போயிருக்கிறார் என்பதில் ஆரம்பித்த செய்தி, மருதநாயகத்தை ஏ.ஐ உதவியுடன் முடிக்கப்போகிறார் என்பது வரை வந்திருக்கிறது. அர்விந்த்தை சந்தித்தது அதற்காகத்தான் என்பது எனக்குப் பிடித்த வதந்தி. பெர்பிளக்ஸிட்டி போல, சினிமா புரொடக்ஷனுக்காக தானே ஒரு ஏ.ஐ உருவாக்கப்போகிறார், அதற்காகத்தான் இந்த சந்திப்பு நடந்தது என்பது என்னுடைய யூகம்.

பெர்பிளெக்ஸிட்டி சந்திப்புக்கு முன், லாஸ் வேகாஸில் நடந்த NAB ஷோ 2025 நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். NAB ஷோ (நேஷனல் அசோசியேஷன் ஆஃப் பிராட்காஸ்டர்ஸ்) என்பது உலகின் மிகப்பெரிய மீடியா, பொழுதுபோக்கு, மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி. இது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் லாஸ் வேகாஸில் நடக்கிறது.

NAB ஷோவில் புதிய கேமராக்கள், ஒளிப்பதிவு கருவிகள், AI ஆல் இயங்கும் படத்தொகுப்பு மென்பொருள்கள், மற்றும் ஸ்ட்ரீமிங் தொழில்நுட்பங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. சினிமா, தொலைக்காட்சி, மற்றும் டிஜிட்டல் படைப்புகளை உருவாக்குபவர்கள் இங்கு கூடுவார்கள். கமல் அங்கும் சென்று வந்திருக்கிறார். வந்து என்ன செய்யப்போகிறார் என்று ஆவலுடன் காத்திருக்கிறேன். It will be a KAMAL'S AI SHOW.

**ISR செல்வகுமார்** ஏ.ஐ நிபுணர்,
திரைப்பட இயக்குநர்






S. அமர்கீத்

# “என்னடி செஞ்ச என்னோட நெஞ்ச”

## மையல் திரைப்படத்தின் முதல் தனிப் பாடல்

சமூக வலைத்தளங்களில் பிரபலமாகும் “என்னடி செஞ்ச என்னோட நெஞ்ச” மையல் திரைப்பட முதல் தனிப் பாடல்.

ஐகான் சினி கிரியேஷன்ஸ் எல்எல்பி (அனுபமா விக்ரம் சிங், வேணுகோபால் R ) தயாரித்து வழங்கும் மையல் திரைப்படத்திலிருந்து முதல் தனிப் பாடல் வெளியாகி உள்ளது. ஏபிஜி ஏழுமலை அவர்கள் இயக்கியுள்ள இந்த படத்தில் சேது, சம்ரிதி தாரா, உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். பிரபல இசையமைப்பாளர் திரு. சௌந்தர்யன் அவர்களின் புதல்வன் S. அமர்கீத் அவர்கள் அறிமுக இசையமைப்பாளராக இசையமைத்துள்ள இந்த பாடலை கவிஞர் ஏகாதேசி அவர்கள் எழுதியுள்ளார். சரிகம தமிழ் வெளியிட்டுள்ள இந்த பாடல் தற்பொழுது சமூக வலைத்தளங்களில் பிரபலமாகி வருகிறது.

என்னடி செஞ்ச என்னோட நெஞ்ச
கத்துறேன் தூங்கவில்லை
கண்ணாடி சில்லா
கத்தாழை முள்ளா
குத்துறே தாங்கவில்லை

என்ற பாடல் வரிகளோடு வலம் வந்து கொண்டிருக்கும் இந்த பாடல் மிகச் சிறந்த இன்னிசை பாடலாக இருக்கும் என்று பலரும் கருதுகின்றனர். சத்ய பிரகாஷ், வந்தனா ஸ்ரீனிவாசன் ஆகியோர் பாடியுள்ளனர். அறிமுக இசையமைப்பாளர் அமர்கீத் அவர்களுக்கு திரை மொழி சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



## தமிழ் சினிமாவின் முதல் பிரம்மாண்ட நாயகன்



# எம்.கே.ராதா

ஒலிப்பதிவுக் கூடத்துக்கு கால்ஷீட் நேரத்துக்கு அரைமணி நேரம் முன்னதாகவே சென்றுவிடு, உன்னுடைய நேரத்தைத் தயாரிப்பாளர் வாங்கியிருக்கிறார். அவருடைய காசை வீணடிக்காதே" என்று தனது மகனுக்கு தொழில் பக்தியையும் நேரம் தவறாமை யையும் சொல்லிக் கொடுத்தவர் திரு எம். கே.ராதா அவர்கள்.

மதராஸ் கந்தசாமி ராதா கிருஷ்ணன் என்கிற எம்.கே.ராதா. சினிமா மோகத்தினால் தமிழகத்தின் ஏதோ ஒரு மூலையில் பிறந்து சென்னையை நோக்கி படையெடுக்கும் பல கலைஞர்களுக்கு மத்தியில் சென்னை மயிலாப்பூரில் 1910 ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி பிறந்து சினிமாவிற்குள் அடியெடுத்து வைத்தவர் எம்.கே.ராதா அவர்கள் இவரது தந்தை பிரபல நாடக ஆசிரியர் கந்தசாமி முதலியார். பல நாடகங்களை எழுதிய கந்தசாமி அவர்களிடம் அந்தக் காலத்தில் பல நாடக நடிகர்கள் பாடம் கற்றுக்கொள்ள வருவது வழக்கம். அவர்களுக்கு தனது இல்லத்திலேயே நாடக ஒத்திகை நடத்துவார் கந்தசாமி வாத்தியார். இதுவே எம்.கே.ராதா அவர்களுக்கு நாடகங்கள் மேல் காதல் பிறக்க ஆதாரமாய் அமைந்தது. பல நாடகங்களின் பாடங்கள் அவருக்கு அத்துபடியாயின. மதராஸ் ஹிந்து பயாலஜிக்கல் மேல்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த எம்.கே.ராதா அவர்கள் தனது ஏழாவது வயதில் நாடகத்துறையில் அடியெடுத்து வைத்தார். சிறுவயதிலேயே தாயை இழந்த எம்.கே.ராதா அவர்கள் தன்னோடு பயணிப்பதை பாதுகாப்பாக உணர்ந்தார் அவரது தந்தை கந்தசாமி வாத்தியார். தந்தை ஆசிரியராக இருந்ததால், வீட்டிலேயே எம்.கே. ராதாவுக்குப் பாடம் நடத்தினார். உயரமான மற்றும் அழகான எம் கே ராதா விரைவில் மேடை நடிகராக ஒரு முத்திரையைப் பதித்து, தென்னிந்தியா மட்டுமல்ல, சிலோன் (இப்போது இலங்கை), பர்மா (இப்போது மியான்மர்) போன்ற அண்டை நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்தார். இவரது நாடகத்தில் சிறு சிறு வேடங்களிலும் நடித்தவர்தான் எம்.ஜி.ஆர். தனது தம்பி போல எம்.ஜி.ஆரை வளர்த்தவர் எம்.கே.ராதா. கடைசி காலம் வரை ராதாவை எம்.ஜி.ஆர். 'அண்ணன்' என்றே அழைப்பார். அவரது தந்தை அவருக்கு திரைப்படம் மற்றும் மேடை நடிப்பின் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்.

மகனுக்கு சினிமாவில் நடிக்க ஆர்வம் இருப்பதை உணர்ந்த கந்தசாமி வாத்தியார் அவர்கள் சினிமாவிற்கு ஏற்ற கதையை தேடிக்கொண்டிருந்த நிலையில் கே.பி.கேசவன் நடித்த பதிபக்தி என்ற நாடகத்தை திரைப்படமாக்க முடிவு செய்தார். இதன்படி பதிபக்தி கதையின் உரிமையை கேசவன் அவர்களிடம் இருந்து வாங்கி அதனை திரைப்படமாக்கும் முயற்சியில் இறங்கினார். இந்நிலையில் அந்த உரிமையை ரத்து செய்து கே.பி. கேசவன் அவர்கள் தானே அந்த படத்தை தயாரித்து நடிக்க இருப்பதாக தெரிவித்தார். இதனால் அம்முயற்சி யிலிருந்து விலகி ஆனந்த விகடன் பத்திரிகையில் எஸ்.எஸ். வாசன் எழுதிய சதி லீலாவதி என்கிற கதையை திரைப்படமாக்குவதாக முடிவு செய்தார். கோயம்புத்தூர் மருதாச்சல செட்டியார் திரைப்படத்தை தயாரிப்பது என முடிவு செய்து கந்தசாமி முதலியார் கதை வசனம் எழுத எல்லீஸ் ஆர் டங்கன் இயக்குவது என முடிவு செய்யப் பட்டது. சதி லீலாவதி' திரைப்படம் எல்லிஸ் ஆர். டங்கனின் முதல் படமாகும். சுவாரஸ்யமாக, இந்தப் படம் எஸ்.எஸ்.வாசன் (எழுத்தாளர்), டி.எஸ்.பாலையா, என்.எஸ். கிருஷ்ணன் மற்றும் எம்.ஜி. ராமச்சந்திரன் போன்ற பல திறமையாளர்களை அறிமுகப் படுத்தியது, அவர்களில் பெரும்பாலோர் திரைப்பட வரலாற்றை உருவாக்க மலர்ந்தனர். எம்.கே.ராதா தனது முதல் படத்தில் ஹாலிவுட்டில் பயிற்சி பெற்ற எல்லிஸ் ஆர். டங்கன் போன்ற ஒரு இயக்குநரின் கீழ் பணியாற்றிய தனித்துவமான நன்மையைப் பெற்றார். வாசனின் கதையை அடிப் படையாகக் கொண்டு திரைக்கதை எழுதிய கந்தசாமி முதலியார், டங்கனின் சினிமா மற்றும் ஷேக்ஸ்பியர் பற்றிய அறிவால் அவரைக் கவர்ந்தார். டங்கன் அவரை 'அப்பா' என்று அழைக்கும் அளவுக்கு. அவர் எம்.கே.ராதாவை ஒரு சிறந்த நடிகராக வடிவமைத்தார். தனது காதல் மனைவி லீலாவதியை சித்திரவதை செய்யும் குடிகார கணவனை (அவர் மது அருந்துபவராக இருந்தாலும்) யதார்த்தமாக சித்தரித்ததற்காக எம். கே.ராதா பெரும் பாராட்டைப் பெற்றார். ஆனால் தயாரிப்பாளர் ஏ. என். மருதாச்சலம் செட்டியார், டங்கன் மற்றும் கந்தசாமி முதலியார் ஆகியோர் ஒரு சிக்கலில் சிக்கினர். பதிபக்தி நாடக ஆசிரியர் கேசவன் அவர்கள் எம்.கே.ராதா நடித்த சதிலீலாவதி திரைப்படம் வெளியாகும் வேளையில் தனது பதிபக்தி கதையைத்தான் சதிலீலாவதி என்ற பெயரில் திரைப்படமாக எடுத்துள்ளனர் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். ஆனால் திரு.எஸ்.எஸ்.வாசன் அவர்கள் சதிலீலாவதி திரைப்படத்தின் கதை ஆங்கில நாவலான டாம்ஸ்பரி ஹவுசின் அடிப்படையில் எழுதப்பட்ட கற்பனை கதை என்று விளக்கி கதை தொடர்பான பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். திரைப்படத்தின் கதை தொடர்பாக நீதிமன்றத்தை நாடிய முதல் தமிழ் திரைப்படம் இதுவாகத்தான் இருக்கும். இத்திரைப்படத்தில் தனக்கு ஜோடியாக நடித்த எம்.எஸ். ஞானாம்பாள் அவர்களை காதலித்து திருமணம் செய்து கொண்டார் எம். கே.ராதா அவர்கள். சதிலீலாவதி திரைப்படம் மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்று எம்.கே.ராதா அவர்கள் மிகவும் பிரபலமானார்.

சதி லீலாவதியின் வெற்றிக்குப் பிறகு அடுத்து வந்த இரு வருடங்களில் 'மாயா மச்சீந்திரா', 'சந்திரமோகனா' 'துளசிதாஸ்', 'சதிமுரளி' ஆகிய படங்களில் நடித்தார். எல்லாம் சுமாரான வெற்றியைப் பெற்றன. அப்போது 'இலங்கைக் குயில்' என்று அழைக்கப்பட்ட சிங்களத் தாரகை தவமணிதேவியுடன் இணைந்து 'வனமோகினி' என்ற படத்தில் நடித்தார். ஹாலிவுட்டில் அப்போது பிரபலமாக இருந்த டார்ஜான் வகைப் படமாக முழுக்க முழுக்கக் காட்டிலேயே படமாக்கப்பட்ட அந்தப் படம் மாபெரும் வெற்றிபெற்றது. இந்தச் சமயத்தில் ஜெமினி ஸ்டூடியோவைத் தொடங்கிய வாசன் தனது கம்பெனியின் நிரந்தர நடிகராக எம்.கே. ராதாவை ஒப்பந்தம் செய்துகொண்டார்.

தமிழ் சினிமாவின் முதல் பிரமாண்டத் தயாரிப்பாக ஜெமினி தயாரித்த 'சந்திரலேகா' படத்தின் நாயகனாக எம்.கே.ராதா நடித்தார். 'சந்திரலேகா' வரலாறு காணாத வெற்றிபெற்றது. ராதாவுக்குப் பெரும்புகழையும் கொண்டுவந்து சேர்த்தது. எம் கே ராதாவும், வில்லனாக நடித்த ரஞ்சனும் மோதும் கத்திச் சண்டைக் காட்சியைப் பார்த்து மிரண்ட ரசிகர்கள் திரும்பத் திரும்ப திரையரங்கு நோக்கிக் குவிந்தனர். தமிழ் சினிமாவின் முதல் சாகச நாயகன் (ஆக்ஷன் ஹீரோ) என்றும் எம்.கே. ராதாவைப் பேச வைத்தது இந்தப் படம். 'சந்திரலேகா'வை இந்தியிலும் தயாரித்த வாசன் அதிலும் எம்.கே. ராதா, டி.ஆர்.ராஜகுமாரி ஜோடியை நடிக்கவைத்து பாலிவுட்டிலும் பெரிய வெற்றியை ஈட்டினார். அதன் பின்னர் மீண்டும் ஒரு பிரமாண்டமாக 'அபூர்வ சகோதரர்கள்' படத்தைக் குறுகிய காலத்தில் எடுத்து முடித்தார் வாசன். எம் கே ராதா, விஜயன் விக்ரமன் என்ற இரட்டையர்கள் வேடம் ஏற்றார். பானுமதி கதாநாயகியாக நடித்த



இந்தப் படத்தில் ஆர்.நாகேந்திர ராவ் என்ற கன்னட நடிகர் வில்லனாக அறிமுகமானார். 1940ல் பி.யு. சின்னப்பா நடிப்பில் வெளியான 'உத்தமபுத்திரன்' திரைப்படம் 'மேன் இன் தி அயன் மாஸ்க்' என்ற ஆங்கிலப் படத்தைத் தழுவி தமிழ் சினிமாவின் முதல் இரட்டை வேடப் படமாக வெளிவந்தது. ஆனால் ஆங்கிலப் படத்தில் பயன்படுத்தப்பட்ட கேமரா தந்திரங்களைத் தமிழில் துல்லியமாகக் கையாள முடியவில்லை. ஆனால் 'அபூர்வ சகோதரர்கள்' அந்தக் குறையைப் போக்கியது. ரசிகர்கள் இரட்டை வேடக் காட்சிகளை கண்டு வியந்தனர். விஜயனாகவும் விக்ரமனாகவும் வேறுபாடு காட்டிய எம் கே ராதாவின் நடிப்பு உயர்தரமாக இருந்தது. சந்திரலேகாவுக்கு இணையாக வசூலில் சாதனை படைத்த அபூர்வ சகோதரர்கள் படத்துக்குப் பிறகு பல சமூகக் கதைகளிலும் நடித்து சாதனை படைத்தார் எம் கே ராதா. கம்பீரமான ராஜா வேஷங்களில் அசத்திய இவர் 'சம்சாரம்' என்ற படத்தில் சாமானிய மனிதனாக, நாடக பாணி நடிப்பின் தாக்கம் இல்லாமால் இயல்பான நடிப்பை வெளிப்படுத்தி ரசிகர்களைக் கவர்ந்தார். இந்த சம்சாரம் என்ற திரைப்படத்தில் தான் மிகவும் பிரபலமான அம்மா பசிக்குதே தாய் பசிக்குதே என்ற பாடல் இடம் பெற்றது. எம்.கே.ராதா அவர்கள் நடித்த நல்ல காலம் என்ற திரைப்படத்தின் டைட்டில் கார்டில் "அகில உலக புகழ்" எம்.கே.ராதா என்று அடைமொழி பட்டம் கொடுக்கப்பட்டது. பிறகு போர்ட்டர் கந்தன் என்ற திரைப்படத்தில் போர்ட்டர் தொழிலாளியாக நடித்தார். ஆனால் ஆக்சன் ஹீரோவாக மக்களால் பார்க்கப்பட்ட எம்.கே.ராதா அவர்கள் ஒரு சாதாரண தொழிலாளியாகவும் கஷ்டப்படும் சாமானியன் ஆகவும் நடித்ததை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, ஆகவே படம் தோல்வி அடைந்தது. ஓரிரு ஹிந்தி படங்களில் நடித்தார் ஆனால் ஹிந்தியில் தொடர்ந்து நடிக்க விருப்பம் இல்லாத காரணத்தினால் இந்தி திரைப்படங்களில் நடிப்பதை தவிர்த்தார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் திரைப்படத்தில் முதன்முதலாக எழுதிய பாடலான "உனக்கு எது சொந்தம் எனக்கு எது சொந்தம் உலகத்துக்கு எது தான் சொந்தமடா" என்ற பாடல் இடம் பெற்ற பாசவலை படத்தில் எம். கே.ராதா அவர்கள் தான் கதாநாயகன். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். உடன் சதிலீலாவதி, மாயா மச்சந்திரா போன்ற திரைப்படங்களிலும் நடிகர் திலகம் சிவாஜி உடன் அம்பிகாபதி, உத்தம புத்திரன், வணங்காமுடி, புதையல் போன்ற திரைப்படங்களிலும் மேலும் பி.யு.சின்னப்பா டி.ஆர்.மகாலிங்கம் ஜெமினிகணேசன் ஆகிய நடிகர்களுடன் திரைபடங்களில் நடித்தார்.


எம்.கே.ராதா அவர்கள் தினமும் ஒருமணி நேரம் கத்திச் சண்டைப் பயிற்சி செய்வார். மேலும் தினமும் கடற்கரையில் குதிரை சவாரி பயிற்சி மேற்கொள்வார்.இந்த முறையான பயிற்சியால்தான், தமிழ்த் திரையில் முதன்முதலாக இரண்டு கத்திகளை வைத்து, சண்டைக் காட்சிகளில் அவரால் நடிக்க முடிந்தது.

விவசாயத்தை மையப்படுத்திய படம் ஒன்றில் நெல்மூட்டையை முதுகில் தூக்கிப் போகும் ஒரு காட்சியைப் படம்பிடிக்க, மூட்டைக்குள் பஞ்சை அடைத்து எடுக்கலாம் என்றனர். அதற்கு எம் கே ராதா அவர்கள் நெல்லையே நிரப்புங்கள். அப்போதுதான் அந்தக் காட்சி நம்பகத்தன்மையோடு இருக்கும் என்று நெல்மூட்டையைத் தூக்கியே நடித்திருக்கிறார். எம்.கே.ராதா அவர்கள் ஒரு நாடகத்தில் நவாப் வேடம் ஏற்றிருந்தாராம். நாடகத்தின் முடிவில் உயரமான சிம்மாசனத்திலிருந்து நவாப் படிக்கட்டில் உருண்டு விழுவது போன்ற காட்சியில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக விழுவாராம். இதைப்பார்ப்பதற்கென்று கூட்டம் கூடுமாம். அதிலிருந்தே அவரின் பெயரோடு 'நவாப்' சேர்ந்து கொண்டது.

மற்றொரு விழாவில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. விழா மேடையில் கலைஞர்கள், பழம்பெரும் நடிகர் திரு. எம்.கே.ராதா மற்றும் நடுநாயகமாக அப்போதைய தமிழக முதல்வர் எம். ஜி.ஆர். அவர்கள் அருகே அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அமர்ந்திருக்க. முதல்வர் அவர்கள் கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கொண்டிருக்கிறார். அவர்களும் மகிழ்ச்சியோடு வாங்கிச்செல்கின்றனர். எம்.கே.ராதா அவர்கள் விருது வாங்க செல்லும்போது முதல்வர், அவ்விருதை நெடுஞ்செழியனை வைத்து தரச்செய்கிறார். திரு எம்.கே.ராதாவுக்கும் மற்றவர்களுக்கும் அதிர்ச்சி. எம்.கே.ராதா அவர்களுக்கும் மிக ஆதங்கம் முதல்வர் கையினால் வாங்க முடியவில்லையே என்று.

அடுத்த நொடி முதல்வர் எம்ஜிஆர் அனைவரின் முன்பும் எம். கே.ராதா அவர்களின் கால்களை தொட்டு வணங்கியதை கண்டு அதிர்ச்சி அடைந்தார் எம்.கே.ராதா





ஏதோ சொல்ல முயலும் போது, அவரை தடுத்து எம்.ஜி.ஆர் கூறியதாவது : "நான் ஆரம்ப காலத்தில் கஷ்டப்படும் போது தங்கள் பெற்றோர் என்னை மகன் போலவும் தாங்கள் என்னை சகோதரன் போலவும் கருதி இருக்க இடம் உணவு உடையும் கொடுத்து எனக்கு சினிமாவில் வாய்ப்பும் கொடுத்து, நான் இந்த நிலையை அடைய மூல காரணமாக இருந்த தங்களுக்கு நான் போய் விருது வழங்குவது தங்களை அவமதிக்கும் செயலாகும். " தாங்களன்றோ என்னை ஆசீர்வதித்து அருளி இச்சபையின் முன் கௌரவிக்க வேண்டும்" என்று சொன்னது தான் தாமதம். எம்.கே. ராதா உள்பட அனைவரின் கண்களும் குளமாயின.ஒரு மாநில முதல்வர் கௌரவம் பார்க்காமல் தனது நன்றியையும் விசுவாசத்தையும் உலகறியச் செய்து எம்.கே.ராதா அவர்களுக்குப் பெருமை சேர்த்ததை புகழ வார்த்தைகள் தான் ஏது? இந்த சம்பவம் நடைபெற்ற பொழுது எடுக்கப்பட்ட புகைப்படத்தை தனது இறுதி காலம் வரை வெளியிடக் கூடாது என்று தனது குடும்பத்தாரிடம் வேண்டுகோள் விடுத்தார் எம்.கே. ராதா. ஆயினும் எம்ஜிஆர் அவர்கள் தான் எழுதிய "நான் ஏன் பிறந்தேன்" என்கிற தொடரில் இந்த புகைப்படத்தை வெளியிட்டு எம்.கே.ராதா அவர்களின் மேல் தனக்குள்ள நன்றியை வெளிப்படுத்திக் கொண்டார்.

எம்.கே.ராதா 50 படங்களில் நடித்தார். அவற்றில் பெரும்பாலானவை சரித்திர படங்கள். பாடத் தெரிந்தவர்கள் மட்டுமே ஹீரோவாக முடியும் என்ற காலத்தில் முதன் முறையாக பாடத் தெரியாத எம்.கே. ராதா பெரிய ஹீரோவாக வலம் வந்தார். தமிழ் சினிமாவின் முதல் மாஸ் ஹீரோ என்றும் எம்.கே.ராதாவை சினிமா வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள். எம்.கே.ராதாவுக்கு ஞானாம்பாள், ரத்தினம் என்ற இரண்டு மனைவிகள். ஆறு மகன்கள், இரண்டு மகள்கள். இவரது மகன் ராதா விஜயன் சிறந்த கிடாரிஸ்ட் மற்றும் கீபோர்டு பிளேயர். பல திரைப்படங்களில் பணியாற்றியுள்ளார். எம்.கே.ராதாவின் நினைவைப் போற்றும் விதமாக தமிழ்நாடு அரசு, சென்னை, தேனாம்பேட்டை அருகில் உள்ள பகுதிக்கு எம்.கே.ராதா நகர் என்று பெயரிட்டது. 1973இல் தமிழக அரசின் கலைமாமணி பட்டம் பெற்றார். 2004இல் இந்திய அஞ்சல் துறை எம். கே.ராதா நினைவாக அவரது உருவப் படத்துடன் சிறப்பு அஞ்சல் உறை வெளியிட்டது. 1985 ஆகஸ்ட் 29 அன்று காலமானார்.

அன்பன் கார்த்திகேயன்
எழுத்தாளர்

THIRAI MOZHI TAMIL MONTHLY REGISTRAR OF NEWSPAPER FOR INDIA R.Dis No:579/2023
**RNI No: TNTAM/2023/88599** Published on 2nd WEEK OF EVERY MONTH
April - 2025

# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

**பக்கம் 2-ன் தொடர்ச்சி...**

பெற்றது. இதே நாவலை தழுவி மற்றும் ஒரு படம் R.M. கிருஷ்ணசாமி இயக்கி 1951ம் ஆண்டு வெளிவந்தது.

ராஜாம்பாள் தமிழில் வெளிவந்த முதல் துப்பறியும் படம் ஆகும். இப்படம் சட்டவல்லுனர்கள் இடையே பரபரப்பு ஏற்படுத்தியது. இதற்கு காரணம் இப்படத்தின் கதை சட்டத்தை தனக்கு சாதகமாக சுயநலத்துடன் பயன்படுத்தும் ஒரு நீதித்துறை அதிகாரியை மையமாக வைத்து எடுக்கப்பட்டது.

நாராயணன் அவர்களின் பட்டறையிலிருந்து வந்த மற்றுமொரு சுவாரஸ்யமான படம் 1937ம் ஆண்டு வெளிவந்த விக்ரம ஸ்த்ரீ ஸாஹஸம். ஒரே படத்தில் வெவ்வேறு இரு கதைக்களம் என்று இப்படத்தில் இடம் பெற்றது. இது அந்த



காலகட்டத்தில் அபூர்வமானது. ஆகையால் இப்படத்துக்கு இன்னொரு பெயர் நவீன ஸ்த்ரீ ஸாஹஸம் என்று இருந்தது. இதற்கு கீழே உள்ள 1937 ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வந்த விளம்பரம் சான்று.

நாராயணன் அவர்கள் தமிழத்திரை வரலாற்றில் ஒரு முக்கிய நபர் ஆவார். அவரின் வாழ்க்கை மற்றும் திரைத்துறையில் அவரின் சில

சாதனைகள்:

தென் இந்தியாவின் முதல் பேசும் ஸ்டுடியோவை நிறுவுதல்

- ஹாலிவுட் ஸ்டுடியோக்களுக்கு சென்று தொழிநுட்பம் மற்றும் வியாபாரம் பற்றி ஆராய்ந்து தெரிந்து கொண்டு வந்த முதல் நபர்
- அவரின் மனைவி இந்தியாவின் முதல் பெண் ஒலிபதிவாளர் மற்றும் 5 படங்களுக்கு ஒலிப்பதிவு செய்த முதல் பெண்மணி

பிலிம் எக்சிபிடர் சர்வீசஸ் துவக்கி திரைப்பட




கண்காட்சிகளை நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு உயர்நிலைக்கு கொண்டு சென்றது.

துரதிர்ஷ்டவசமாக நாராயணன் அவர்கள் 39 வயதிலயே காலமானார். R. பிரகாஷ், ஜித்தன் பாணர்ஜீ, T.R. ரகுநாத் மற்றும் பல ஜாம்பவான்களின் வெற்றிப் பயணத்திற்கு வித்திட்டார். இப்படி பல சாதனைகள் செய்து தமிழ் திரை வளர்ச்சியில் முக்கிய பங்கு வதித்த இந்த மனிதர் மறைந்த ஜாம்பவான்கள் பட்டியலில் இருப்பது வருத்ததிற்குறிய விஷயம் ஆகும்.

30களின் தமிழ் சினிமா பட இயக்குநர்களை பற்றி மேலும் பல சுவாரஸ்யமான தகவல்களைளுடன் அடுத்த அத்தியாயத்தில் சந்திக்கிறோம். தொடர்ந்து படியுங்கள்.

தொடரும்...




**திரை மொழி**

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**